Atomic Power Station at Kalpakkam

588 Q.—Dr. H. V. HANDE,
Thiru S. DORAISAMY,
Thiru N. K. PALANISAMY,
Thiru K. A. WAHAB : Will the Hon.

the Minister for Electricity be pleased to state—

(a) the date on which the first unit of the Kalpakkam Power Station is likely to go into production;

(b) whether the Government has any proposal to construct a second power station ; and

(c) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) தற்போது கட்டப் பட்டுவரும் கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் முதல் பிரிவு 1975 நவம்பரில் மின் உற்பத்தியைத் தொடங்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்த மின்சக்தி நிலையம் 1976 மார்ச் திங்களுக்குள் வணிகமுறையில் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) கல்பாக்கத்தில் சென்னை அணுமின்சக்தி திட்டத்தின் இரண்டாவது பிரிவை ஆரம்பிப்பதற்கு இந்திய அரசால் இசை வளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவு 1976-க்குள் தயாராகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(உ) இந்த இரண்டு பிரிவுகளின் ஒவ்வொரு பிரிவும் 235 மெகாவாட் மொத்த உற்பத்தித் திறனையும் 215 மெகாவாட் நிகர உற்பத்தித் திறனையும் கொண்டிருக்கும். முதல் பிரிவிற்கு ரூ. 77.1 கோடியும், இரண்டாவது பிரிவிற்கு ரூ. 70.63 கோடியும் செலவாகும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இந்த அட்டாமிக் பவர் ஸ்டேஷன் தமிழ்நாட்டில் எப்போது வரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது? அண்மையில் டாக்டர் சாராபாய் அவர்கள் 1974-க்குள் தமிழ்நாட்டில் மின்சாரம் அதன்மூலம் கிடைக்கும் என்ற வாக்குறுதியைத் தந்திருக்கிறார்களே, இப்போது மீண்டும் ஓராண்டு, ஈராண்டுக்குத் தள்ளிப்போடக் காரணம் என்ன? மகாராஷ்டிரா அட்டாமிக் பவர் ஸ்டேஷனில் பல கோளாறுகள் இருக்கின்றன என்று சொல்லப்படுகின்றது. அதுபோன்ற கோளாறுகள் இங்கே ஏற்படாதிருக்க தக்க நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறதா? இதற்கு ஏன் தாமதம் ஆகவேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : 1974-இல் உற்பத்தி துவங்கப்படும் என்று முதலில் தீர்மானிக்கப்பட்டிருந்தாலும் அதனை ஓராண்டு தள்ளிப்போட்டிருக்கிறார்கள். ஆயினும், குறிப்

பிட்டப்படி அதைத் துரிதமாக முடிக்க வேண்டும் என்று தமிழ் நாட்டின் சார்பில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. நிதிநிலை காரண மாக ஓராண்டு தள்ளிப்போட்டிருக்கிறார்கள்.

திரு. கே. ஏ. வகாப் : கல்பாக்கம் அணுமின்சக்தி நிலையம் வந்து விட்டால் மின்சாரம் மலிவாகக் கிடைக்கும் என்கிறார்களே, அதற்கேற்ப தற்போது மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க அரசு யோசிக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மின்சாரக் கட்டணத்தைப் பற்றி ஏற்கனவே முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக் கிறார்கள்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, இந்த இரண்டு திட்டங்களும் நிறைவேறியதற்குப் பின்னால்-கிட்டத்தட்ட 1980-ம் ஆண்டு என்று எடுத்துக்கொண்டால் நமது நாட்டிற்கு எவ்வளவு மின்சாரம் தேவைப்படும்? அணுமின்சக்தி பிற்காலத்தில் போதிய அளவிற்கு இருக்குமா ? இல்லாவிட்டால் அதற்காக எடுக்கப்படு கின்ற நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதில் கூறியிருக்கிறேன். இருபது ஆண்டுக் காலம் அல்ல. பத்தாண்டுகாலத்திற்குள்ளாகவே பற்றாக்குறை ஏற்படும் என்று சொல்லியிருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, கல்பாக்கம் அணுமின்சக்தி நிலையம் முதல்பிரிவு 1975-ல் வேலையைத் தொடங்கும் என்று குறிப்பிட்டார்கள். ஆனாலும்கூட இப்போது அதிகமான அதிகாரிகளைப் போட்டு, வேலைகளைத் துரிதப் படுத்த வேண்டுமென்று மத்திய அரசு கருதியிருக்கிறது. ஆகவே, 1974-க்கு முன்னாலே முதல் யூனிட் வேலையைத் தொடங்க நம் அரசு மத்திய அரசை வேண்டிக்கொண்டு தகுந்த நடவடிக்கைகளை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, இப்போது ஓராண்டுக்குத் தள்ளிப்போட்டதைக்கூட, நாம் விரும்பாமல், வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டுமென்று நாம் சொல்லி வருகிறோம்.

Rural electrification

* 589 *Q*.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the rural electrification scheme for all the villages in Tamil Nadu would be completed before the end of 1972 ; and

(*b*) if not, the probable date on which the scheme is likely to be completed?